(ஈ) தமிழ்நாடு, 1975 ஆம் ஆண்டு, மாநில வக்ஃப் வாரியம் (தனியதிகாரியின் பணிகளைச் செல்திறனுக்குதல்) சட்ட முன் வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 43/75)

THE HON. THIRU S. J. SADIQ PASHA : Mr. Speaker, Sir, I beg to move :

"That the Tamil Nadu State Wakf Board (Validation of Functions of Special Officer) Bill, 1975 * (L.A. Bill No. 43 of 1975) be taken into consideration."

Under sub-section (1) of Section 64 of the Wakf Act, 1954 (Central Act 29 of 1954), the Government superseded the Tamil Nadu State Wakf Board for a period of three years from the 20th November 1967. The period of supersession was extended for a further period upto and inclusive of the 23rd May 1971 by a notification, dated the 25th May 1971. The Wakf Board was reconstituted with effect from the 24th May 1971. The Special Officer for Wakfs appointed to exercise and perform the powers and duties of the Board continued to exercise and perform such powers and duties even during the extended period from the 20th November 1967 to the 23rd May 1971. The Special Officer had in that capacity filed several suits before courts even during the extended period of supersession.

Some of these suits have been dismissed by the Courts on the ground that the notification, dated the 25th May 1971, was not a valid one as it could not have retrospective effect and consequently, the Special Officer had no jurisdiction to institute the suits. It is, therefore, necessary to validate all acts and proceedings of the Special Officer during the extended period of supersession of the Wakf Board and also to provide for the restoration of the suits and other proceedings dismissed solely on the ground that the Special Officer had no jurisdiction to institute such suits or other proceedings.

Even though the Wakf Board was reconstituted with effect from the 24th May 1971, a new Secretary was appointed to the Board only with effect from the 12th July 1971. During the period from the 24th May 1971 to the 11th July 1971, the Special Officer had exercised the powers of the Secretary to the Board.

---

* Published in the *Tamil Nadu Government Gazette* Extraordinary, dated 25th October 1975.

[திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா] [1975 நவம்பர் 7

It is considered necessary to validate the acts and proceedings of the special officer as the Secretary to the Board during the said period, so as to avoid such acts and proceedings being challenged in Courts. The Bill seeks to achieve the above objects.

Sir, I commend the motion for the acceptance of the House.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார்: மாண்புமிகு தலைவர் அவர்களே, இங்கே கொண்டு வரப்பட்டிருக்கிற இந்த மசோதாவில் கூறுவதற்கு அதிகம் இல்லாது போனாலும் இந்த மசோதா கொண்டு வரப்பட்டிருக்கும் அடிப்படையை உற்றுநோக்கும்போது வக்ஃப் சம்பந்தமான நிறுவனங்களைக் கவனிப்பதற்கு ஒரு அதனுடைய குறைகளை நிரந்தரமாகப் போக்குவதற்கு ஒழுங்கான விதிகள் இல்லாததுதான் இந்த மாதிரியான குறைகள் ஏற்படுவதற்குக் காரணம். இதன் காரணமாக, சில வழக்குகள், நீதிமன்றங்களுக்குப் போகும்போது சில சந்தர்ப்பங்களில் சட்டத்திலுள்ள சில குறைபாடுகள் காரணமாக தள்ளுபடி செய்யப்படக்கூடிய முறைகள் இருக்கின்றன. இந்தக் குறைகளைப் போக்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு தனி மனிதர் கமிஷனை நியமித்து ஒழுங்குமுறைகள் அடங்கிய ஒரு சட்ட திட்டத்தை வக்ஃப் ஆக்டில் ஏற்படுத்துவதற்கான முறையில் ஒரு அறிக்கையைச் சமர்ப்பித்துள்ளார்கள். உண்மையிலேயே அந்த முயற்சிகள் பாராட்டுக்கு உரிய நல்ல முயற்சிகள் ஆகும். இந்த வக்ப் சம்பந்தமான நிர்வாகங்களில் அக்கறை உள்ள அனைவரும் ஈடுபட்டு நல்ல, சிறந்த, மற்ற மாநிலங்களுக்கு முன்மாதிரியாகத் திகழ்கின்ற ஒரு சட்டத்தை நிறைவேற்றி அதன் அடிப்படையில் வக்ஃப் சொத்துக்களுக்கு நல்ல பாதுகாப்பை ஏற்படுத்தித் தர வேண்டும். இதை ரெட்ராஸ்பெக்டிவ் ஆக முன்னால் நடந்தவைகளுக்குக் கூட பாதுகாப்பு ஏற்படுத்தித் தரும்படியான முறையில் செய்து தரவேண்டும். இந்த அரசு அப்படி ஏற்படுத்தித் தரும் என்று நம்பிக்கை இருந்து வருகிறது. இந்தச் சட்டத்தைப் பொறுத்த வரையிலும் கூட, முன்னால் ஏற்பட்ட ஒரு தவறின் காரணமாகத் தான் இந்தச் சட்ட திருத்தத்தின் அவசியம் ஏற்பட்டிருக்கிறது. இனியாவது எதிர் காலத்தில் இப்படிப்பட்ட தவறுகள் நிகழாமல் இருக்கும்படி பார்த்துக்கொள்ள வேண்டும். ஒழுங்காக நடைபெறாத

1975 நவம்பர் 7] [திரு. வா. மை. அப்துல் ஜப்பார்]

நிறுவனங்கள் சூபர்சீட் செய்யப்பட்டு விசேஷ அதிகாரிகள் நியமிக்கப்பட வேண்டும் — வக்ஃப் பணிகளை தொடர்ந்து செய்ய அதிகாரிகளுக்கு முழு அதிகாரம் இருக்கிறது என்றாலும் எதிர் காலத்திலும் பாதுகாப்பான நிலைமை இருக்க வேண்டும்.

இவைகளை எல்லாம் கருத்திற்கொண்டு எல்லாவற்றையும் விட சிறந்த ஒரு காம்பிரஹென்ஸிவ் ஆக்ட் ஒன்றை ஏற்படுத்த வேண்டும். அப்படிப்பட்ட சட்டம் ஏற்படுத்தப்படப்போகிற காரணத்தால்தான் இந்தச் சட்டத்தின் எதிர்காலத்தைப் பற்றி ஒன்றும் சொல்லாமல் விட்டிருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். ஆகவே, வக்ப் சம்பந்தப்பட்ட விஷயங்கள் எத்தனையோ இருக்கின்றன. லட்சக்கணக்கான உணர்வுகள் இருக்கின்றன அவற்றை எல்லாம் சொல்லி முடியாது. ஆனால், ஓரளவுக்கு முடிந்த அளவுக்கு அவைகளைச் சமாளிப்பதற்கு இப்போது நாம் சில சட்ட முறைகளை ஏற்படுத்திக் கொண்டு வருகிறோம். நமது முயற்சிகளுக்கு இறைவன் வெற்றி அளிக்க வேண்டும். உதாரணமாகச் சொல்லப் போனால், சொத்துக்கள் எப்படி எல்லாம் விரயமாக்கப் படுகின்றன என்று சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. குறிப்பாக, சிதம்பரம் பள்ளிவாசலுக்குப் பக்கத்தில் பள்ளி வாசலுக்கு உட்பட்ட இடத்தில் பொது கக்கூசு கட்டப்பட்டிருக்கிறது. அந்த கக்கூசு அகற்றப்பட வேண்டும் என்பதற்காக எடுத்த முயற்சிகள் வீணாகிப் போயின. அக்கக்கூசைக் கட்டும் போது பள்ளிவாசலைக் கேட்டுக்கொண்டு கட்டவில்லை. தொழுகைக்குச் செல்கின்றவர்களின் நன்மையைக் கருதி அது கட்டப்படவில்லை. மாறாக, தொழுகைக்குச் செல்கிறவர்கள் மூக்கைப் பொத்திக் கொண்டு உள்ளே போக வேண்டிய நிலை இருக்கிறது. பக்கத்திலுள்ள மார்க்கெட்டுக்குத் தான் அது வசதியாக இருக்கிறது. அந்தக் கக்கூசை அகற்ற வேண்டுமென்று கேட்டால், வக்கிர புத்தி படைத்த ஒரு முனிசிபல் தலைவர் அந்தக் கக்கூசை அகற்றுவதற்கு காம்பன்சேஷன் கொடுங்கள்— முதலில் பணத்தைக் கட்டுங்கள் என்று சொல்கிறார். இதைப் போல சொல்ல வேண்டுமானால் இன்னும் எத்தனையோ இருக்கின்றன. அவைகளை இங்கே பேசுவது என்பது பொருத்தமாக இருக்காது என்ற காரணத்தால் இந்த மசோதாவை முழுமையாக வரவேற்கிறேன். எதிர்காலத்திலாவது ஒரு முழுமையான

காம்பிரஹென்சிவ் ஆக்ட் கொண்டு வர வேண்டும். மற்ற மாநிலங்களுக்கெல்லாம் அது முன்மாதிரியாக இருக்க வேண்டும். அத்தகைய சட்டத்தை உருவாக்கித் தர வேண்டுமென்று கேட்டு இந்த மசோதாவை வரவேற்று என் பேச்சை முடித்துக் கொள்கிறேன்.

*மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: மாண்புமிகு உறுப்பினர் ஜப்பார் அவர்கள் மசோதாவை ஆதரித்திருக்கிறார்கள். எனவே இதில் விளக்கம் அளிப்பதற்கு ஒன்றும் இல்லை. அவர் கூறியிருக்கிற ஆலோசனைகள் யாவும் கவனத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும். இந்த மசோதாவைப் பொறுத்தவரையில் ஒரு தனி நபர் கமிஷன் நியமிக்கப்பட்டது. அக் கமிஷன் ஒரு அறிக்கையைக் கொடுத்திருக்கிறது. அறிக்கையின் மீது விவாதம் நடத்தி இருக்கிறோம். விவாதத்திற்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் வந்திருக்கிறார்கள். இப்போது கொண்டுவந்துள்ள சட்டத்தில், இனிமேல் வரக்கூடிய போர்டுகள் சூபர்சிடு செய்தால் என்ன செய்வது என்ற முறையில் பேசினார்கள். அப்படிப்பட்ட நிலை ஏற்படக் கூடாது என்று நம்புகிறோம்--விரும்புகிறோம். திறமைக்குறைவு காரணமாக சூபர்சீட் செய்யக் கூடிய நிலைமை ஏற்படக் கூடாது என்று தெரிவித்துக் கொண்டு இந்த மசோதாவை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னுள்ள கேள்வி:

"தமிழ்நாடு, 1975-ஆம் ஆண்டு, மாநில வக்ஃப் வாரியம் (தனியதிகாரியின் பணிகளைச் செல்திறனுக்குதல்) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 43/75) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படவேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

]பேரவைத் தலைவர்] [1975 நவம்பர் 7

பிரிவுகள் 2 முதல் 6 முடிய பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைவர் அவர்களே,

"தமிழ்நாடு, 1975-ஆம் ஆண்டு, மாநில வக்ஃப் வாரியம் (தனியதிகாரியின் பணிகளைச் செல்திறனுக்குதல்) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 43/75) நிறைவேற்றப்பட வேண்டும்" என்று கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, சட்ட முன்வடிவு சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

(உ) தமிழ்நாடு, 1975-ஆம் ஆண்டு, தனியார் மின்வழங்கு நிறுவனங்கள் (கையகப்படுத்துதல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 42/75).

* மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைவரவர்களே,

"தமிழ்நாடு, 1975-ம் ஆண்டு, தனியார் மின்வழங்கு நிறுவனங்கள் (கையகப்படுத்துதல்) திருத்தச் சட்ட முன்வடிவு* (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 42/75) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்."

என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

---

* 1975 அக்டோபர் 25-ம் தேதிய தமிழ்நாடு அரசிதழ் சிறப்பிதழில் வெளியிடப்பட்டுள்ளது.